2011 ஜூன் 9] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

பிறகு, நமது நாட்டின் சொத்தாக மாறிய கச்சத் தீவைத் தாரை வார்த்துவிட்டார்கள். எனக்கு முன்னர் இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, கச்சத் தீவைத் தாரை வார்த்தது, நம்முடைய தமிழக மீனவர்களுக்கு, குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு மிகப் பெரிய இழப்பாகும் ...

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) செல்லிடத் தொலைபேசியை அவையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன, மாமன்றத்தில் செல்ஃபோனை உபயோகிக்கக்கூடாது, off செய்ய வேண்டுமென்று. அதையும் மீறி, திரும்பத் திரும்ப மணி அடித்துக் கொண்டிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது. இனிமேல் தயவுசெய்து மாமன்ற உறுப்பினர்கள் செல்ஃபோனை off செய்துவிட்டு பேரவைக்குள் வரவேண்டும். இல்லையென்றால், அந்த செல்ஃபோன் பறிமுதல் செய்யப்படும் ஒரு சூழ்நிலை ஏற்படும்.

3. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி

கச்சத் தீவு தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையையும் சேர்த்துக் கொள்ள உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தல்—தொடர்ச்சி

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் நம்முடைய மீனவர்களுடைய உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையாக, கச்சத் தீவைத் தாரை வார்த்த பிரச்சினை அமைந்திருக்கின்றது. இதில் மிக முக்கியமாக ஒரு விஷயத்தை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். கச்சத் தீவு தொடர்பான சட்டத்திலே கச்சத் தீவுக்குச் செல்வதற்கும், அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கும், ஏன் அந்தத் தீவிலே மீன் வலைகளைக் காய வைப்பதற்கும்கூட தாரை வார்ப்புச் சட்டத்திலே உரிமை இருந்தாலும்கூட, இலங்கையிலே தமிழ் மக்களுக்கு எதிரான போர் நடைபெற்றிருந்த காலத்திலே, 1983–லே Tamil Nadu Marine Fisheries Act என்ற ஒரு சட்டத்தின் வாயிலாக நம்முடைய